கோவை, தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை - திரு.ப.மாரிமுத்து எம்.ஏ., எம்.எல்., பிஜிடிபிஎம்.

சுருக்கம்

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தட்டச்சர்,தொழிலாளர் ஆய்வர் அலுவலகம்,திருப்பூர் - தட்டச்சர் பதவியில் செல்வி.அ.ராஜஸ்ரீ. பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதி காண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/6113-4/2015. நாள்- .04.2016.

படிக்கவும்

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்-14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் - 20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.5901/PSD-F/2014, நாள் - 29.09.2014
4. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/38317/2014, நாள் - 21.11.2014.
5. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணை எண் ஜி3/2817/2014, நாள் 18.12.2015.
6. கோவை, தொழிலாளர் துணை ஆணையரின் கடிதம் எண்.அ2/5813/2016, நாள்-31.03.2016.
7. திருப்பூர், தொழிலாளர் ஆய்வரின் கடிதம் எண்.அ/161/2016, நாள்-16.02.2016.

---

ஆணை-

மேலே 3 -ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலே 4-ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி தட்டச்சராக தமிழ்நாடு மாநில சார்நிலைப்பணி விதிகளின் பொது விதி 10 (ஏ) (1)-ன்படி பணியமர்த்தப்பட்ட செல்வி.அ.ராஜஸ்ரீ, 05.12.2014 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேலே, 5 -ல் படிக்கப்பட்ட சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் குறிப்பாணையில் அறிவுறுத்தியதின்படி கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தனியருக்கு தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 05.12.2014 (மு.ப) முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating of Group IV services 2013 to 2014 recruitment"

எனவே,தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a) (i) மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32 -ன் கீழ் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டு காலத்திற்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், மற்று அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்- 22.07.2008- தெரிவிக்கப்பட்டுள்ளவாறு **Directorate of Technical Education** நடத்தும் **Certificate course** **Computer on Office Automation** என்ற பயிற்சியிலும் தேர்ச்சி பெற வேண்டுமென இதன் மூல உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்டதன் விவரம் தனியரின் பணிப்பதிவேட்டி உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

தொழிலாளர் இணை ஆணையர்,
கோவை.

மாது 7.4.16

7/4/16

பெறுநர்
செல்வி.அ.ராஜஸ்ரீ,
தட்டச்சர்,
தொழிலாளர் ஆய்வர் அலுவலகம்,திருப்பூர்.
(உரியவழியாக).

நகல்-
1. தொழிலாளர் துணை ஆணையர், கோவை.
2. தொழிலாளர் ஆய்வர் ,திருப்பூர்.
(பணிப்பதிவேடு 1 தொகுதி 4 பதிவுறுத்தாள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெறப்பட்டமைக்கான ஒப்புதலை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு திருப்பூர், தொழிலாளர் ஆய்வர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)
2. பணிப்பதிவேடு/முக்கிய ஆணைத் தொகுப்பு.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது-
தொழிலாளர் ஆணையர், சென்னை-06.